# “எதெர இசுர பிரிமியர்” - தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கு (PFCPR)

## 1. தயாரிப்பின் தன்மை

அடுக்குவாரியான வட்டியைக் கொண்ட வெளிநாட்டு நாணய சேமிப்புக் கணக்கு

## 2. வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்

2.1 கவர்ச்சிகரமான மாதாந்த உயர் வட்டி வீதம்.

2.2 புதிய வட்டி வீதத்திற்காக https://www.peoplesbank.lk/interest-rates/ இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

| வெளிநாட்டு நாணயம் | வருடாந்த வட்டி வீதம் % | | | | |
|---|---|---|---|---|---|
| | 4,999 வரை (சாதாரண சேமிப்பு வட்டி வீதம்) | 5,000 முதல் 24,999 வரை | 25,000 முதல் 49,999 வரை | 50,000 முதல் 99,999 வரை | 100,000இற்கு மேல் |
| அமெரிக்க டொலர் | 1.25 | 4.69 | 4.69 | 4.81 | 4.865 |
| யூரோ | 0.4 | 3.205 | 3.205 | 3.405 | 3.51 |
| பிரித்தானிய பவுண் | 1.0 | 3.85 | 3.85 | 3.95 | 4.10 |
| அவுஸ்திரேலிய டொலர் | 1.0 | 3.625 | 3.625 | 3.875 | 4.125 |

*இது நடப்பு வீதமாக இருப்பதோடு, சந்தை நிலை, தற்றுணிபு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மாற்றத்திற்கு உட்படும்.

2.3 உள்வரும் பண அனுப்பல் கட்டணம் இன்றி இந்தக் கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

2.4 அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைக்காக வெளிச் செல்லும் பண அனுப்பல் வசதி.

2.5 இணையத்தளம் மற்றும் கையடக்கத் தொலைபேசி வங்கி வசதிகள் ஊடாக இலகுவான வங்கியியல் நடவடிக்கைகள்.

2.6 வங்கிக்கு உள்ளே அல்லது வேறு உள்நாட்டு வங்கிகளுக்கு இடையில் பணத்தை மாற்றும் வசதி.

**3. தகைமை**

3.1 இலங்கையராகிய தனிநபர் ஒருவர்.

3.2 இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு தனிநபர்.

3.3 இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டு நபர்.

3.4 இலங்கையில் தற்காலிகமாக சுற்றுலாவில் ஈடுபட்டுள்ள அல்லது இலங்கைக்கு வருவதற்கு எண்ணியுள்ள வெளிநாட்டு நபர்.

3.5 அதிகாரபூர்வ அனுமதி பெற்றவருடன் (Authorized Dealer) அல்லது கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தகருடன் (restricted dealer) ''எதெர இசுர பிரிமியர்'' தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைப் (PFCPR) பேணி வந்து மரணமடைந்த ஒருவரின் சொத்துக்களின் நிருவாகம் முடிவடையும் வரை மேற்படி மரணமடைந்தவரின் சொத்துக்களின் நிருவாகி அல்லது நிறைவேற்றுநர் எனும் பொறுப்பில் உள்ளவர்.

**4. பொது**

I. உள்நாட்டு வங்கி அலகில் ''எதெர இசுர பிரிமியர்'' தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைத் (PFCPR) திறந்து அமெரிக்க டொலர், பிரித்தானிய பவுண், யூரோ மற்றும் அவுஸ்திரேலிய டொலர் ஆகிய நாணய வகையில் சேமிப்புக் கணக்காக மாத்திரம் பேண முடியும்.

II. எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்குகளை (PFCPR) வேறு தகைமையுள்ள ஒரு நபருடன் இணைந்த கணக்காகப் பேண முடியும். எவ்வாறாயினும் இலங்கையில் தற்காலிகமாக சுற்றுலாவில் ஈடுபட்டுள்ள அல்லது இலங்கைக்கு வருகை தருவதற்கு எண்ணியுள்ள வெளிநாட்டவர் ஒருவர் இந்தக் கணக்கை இணைந்த கணக்காகத் திறந்து பேணுவதற்கு தகைமை பெற மாட்டார்.

III. அதிகாரம் பெற்ற முகவர் ஒருவரிடமிந்து அல்லது வரையறுக்கப்பட்ட முகவர் ஒருவரிடமிருந்து அல்லது வெளிநாட்டு சுற்றுலாவுக்காகக் கொள்வனவு செய்து, பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படாத திருப்பி நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்கள், அவற்றின் உண்மைத் தன்மை மற்றும் அடிப்படை பரிவர்த்தனை சம்பந்தமாக வங்கியின் தகுந்த செயற்பாட்டுக்கு உட்பட்டு, வைப்புச் செய்வதன் மூலமும் ''எதெர இசுர பிரிமியர்'' தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கொன்றைத் (PFCPR) திறக்க முடியும்.

IV. இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளில் விடயப்பரப்புக்கு புறம்பாக இருக்கும் எந்தவொரு பரிவர்த்தனை அல்லது மாற்றுதல் PFCPR/PFCA கணக்கிற்கு அல்லது அக் கணக்கிலிருந்து செய்வதற்காக வங்கி, வெளிநாட்டுச் செலாவணி திணைக்களத்தின் பணிப்பாளரின் பூர்வாங்க அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

V. இலங்கை மத்திய வங்கியின் வழிமுறைகள் மூலம் அனுமதிக்கப்பட்டவை எவையும், அதிகாரம் பெற்ற முகவர்களை அல்லது இவ்வழிமுறைகளின் கீழ் வெளிநாட்டுச் செலாவணிகளைக் கையாளுகின்ற எவரையேனும் ஏனைய வேறு சட்டங்களின் ஏற்பாடுகளை இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பதாகவோ, தவிர்ப்பதாகவோ, பாதுகாப்பதாகவோ கருதப்படலாகாது.

## 4.1 தேவைப்படும் பத்திரங்கள் மற்றும் தகவல்கள்

இலங்கையரான தனிநபர் ஒருவர்.

I. முழுப் பெயர், தேசியத்துவம், முகவரி மற்றும் தொடர்பு விபரம்.
II. தேசிய அடையாள அட்டையின் பிரதி அல்லது கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்)
III. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
IV. FATCA பிரகடனம்.
V. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இலங்கைக்கு வெளியில் வதிகின்ற தனிநபர்.

I. முழுப் பெயர், தேசியத்துவ வெளிநாட்டு முகவரி மற்றும் தொடர்பு விபரம்.
II. கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்)
III. இலங்கையிலிருந்து புறப்பட்ட திகதி.
IV. பிரசாவுரிமை அல்லது வெளிநாட்டு அரசினால் வழங்கப்பட்ட விசாவின் தன்மை.
V. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
VI. FATCA பிரகடனம்.
VII. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

இலங்கையில் வதிகின்ற வெளிநாட்டு நபர் ஒருவர்.

I. முழுப் பெயர், தேசியத்துவம், வெளிநாட்டு முகவரி மற்றும் தொடர்பு விபரம்.
II. இலங்கையில் பணிபுரியும் இடத்தின் முகவரி மற்றும் பதவி (இருப்பின்).
III. தொழில் ஒப்பந்தத்தின் பிரதியொன்று மற்றும் சம்பள விபரம்.

IV. கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்) மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விசா விபரம்.
V. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
VI. FATCA பிரகடனம்.
VII. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

இலங்கைக்குத் தற்காலிகமாக வருகைதருகின்ற அல்லது இலங்கைக்கு வருகைதருவதற்கு எண்ணியுள்ள வெளிநாட்டு நபர்.

I. முழுப் பெயர், தேசியத்துவம், வெளிநாட்டு முகவரி மற்றும் தொடர்பு விபரம்.
II. கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்)
III. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
IV. FATCA பிரகடனம்.
V. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

“எதெர இசுர பிரிமியர்” தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கொன்றை (PFCPR) வைத்திருந்து மரணமடைந்த ஒருவரின் ஆதனங்களின் நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்.

I. முழுப் பெயர், தேசியத்துவம், முகவரி மற்றும் தொடர்பு விபரம்.
II. தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்)
III. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
IV. FATCA பிரகடனம்.
V. நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள நிருவாகக் கடிதத்தின் அல்லது மரணசாதன அதிகாரப்பத்திரத்தின் பிரதி.
VI. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

**4.2 தேவையான குறைந்தபட்ச மீதி**

| **வெளிநாட்டு நாணயம்** | **குறைந்தபட்ச மீதி** |
|---|---|
| அமெரிக்க டொலர் | 5,000/- |
| யூரோ | 5,000/- |
| பிரித்தானிய பவுண் | 5,000/- |
| அவுஸ்திரேலிய டொலர் | 5,000/- |

**4.3** a) ஆரம்ப வைப்புத் தொகையொன்று இல்லாமல் எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கொன்றைத் (PFCPR) திறக்க முடியும்.

b) 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு எவ்வித செயற்பாடும் இல்லாத கணக்குகள், செயற்படா வகைக்கு மாற்றப்படும்.

c) ஒரு வருடத்திற்கு மேல் பூச்சிய மீதியைக் கொண்டுள்ள கணக்குகள் தானியங்கியாக மூடப்படும்.

**5. அனுமதி பெற்ற வரவு**

5.1 இலங்கைக்கு வெளியிலிருந்து, வங்கி முறைமை ஊடாக கணக்கு உரிமையாளரின் பெயரில் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி பண அனுப்பல்.

5.2 ஒரே கணக்கு உரிமையாளரின் மற்றும்Æஅல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் (அதாவது, வாழ்க்கைத் துணை, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள்) தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கொன்றிலிருந்து (PFCPR) மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

5.3 இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர் ஒருவரின் நடப்பு பரிவர்த்தனை சம்பந்தமாக, தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கொன்றிலிருந்து (PFCPR) அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கிலிருந்து மேற்கொள்ளுகின்ற பண மாற்றல்.

5.4 இலங்கையில் முதலீடு அல்லது சொத்துக்களை விற்பதை / கையகப்படுத்திக்கொள்ளுவதைத் தவிர்த்து, இருதரப்பினரும் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர்களாக இருக்கும்பட்சத்தில் கணக்கு உரிமையாளரைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல், ஏனைய தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (PFCA) /எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (PFCPR) அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கிலிருந்து மேற்கொள்ளுகின்ற பண மாற்றல்.

5.5 கணக்கு உரிமையாளர் மற்றும் / அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினரால் சுற்றுலா நோக்கத்திற்காகப் பெற்றுக் கொண்டதில் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படாத வெளிநாட்டு நாணயம்.

5.6 வெளிநாட்டுச் செலாவணி அமெரிக்க டொலர் 15,000/- அல்லது அதற்கு சமமான ஏனைய வெளிநாட்டு நாணயத்தை விஞ்சுகின்றபோது, சுங்கத்திணைக்களத்திற்கு அல்லது, செலாவணி தொகை அமெரிக்க டொலர் 15,000/- அல்லது அதற்கு சமமான ஏனைய வெளிநாட்டு நாணயத்திற்குக் குறைகின்றபோது, வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த வெளிப்படுத்தலின் மீது கணக்கு உரிமையாளர் இலங்கைக்குக் கொண்டு வந்த வெளிநாட்டுச் செலாவணி.

5.7 கணக்கு உரிமையாளரின் அல்லது அவருடைய நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் வெளிநாட்டு பயண அட்டையில் (FTC) பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளாமல் எஞ்சியுள்ள அக் கணக்கு உரிமையாளரின் அதே தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCPR) FTC ஆல் வழங்கப்பட்ட நிதியின் மீதி.

5.8 வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (BFCA) உள்வரும் முதலீட்டு கணக்கிலிருந்து (IIA) அல்லது அக் கணக்கு உரிமையாளரின் வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கிலிருந்து மேற்கொள்ளுகின்ற பண மாற்றல்.

5.9 பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவது சம்பந்தமாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபரின் இராஜதந்திர வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (DFCA) பண மாற்றல் செய்தல்.

5.10 கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கில் (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கில் (PFCPR) பற்று வைத்ததன் மூலம் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தால், இலங்கை அபிவிருத்தி முறிகளில் (SLDBS) வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்து கிடைத்த கூப்பன் வருமானம், விற்பனை / முதிர்வடையும் வருமானம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பெறுகைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம்.

5.11 கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கில (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கில் (PFCPR) பற்று வைத்ததன் மூலம் அல்லது அக் கணக்கிலிருந்து வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கிற்கு (OIA) மாற்றப்பட்ட பணத்தை, பங்களிப்பு விகிதாசாரத்திற்கு உரியதாக, பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய முதலீட்டை மேற்கொண்டுள்ள வெளிச் செல்லும் முதலீட்டுக் கணக்கிலிருந்து கிடைக்கும் எந்தவொரு வருமானத்தை அல்லது மூலதன வருமானத்தை மீள் வெளிச் செல்லும் முதலீட்டுக் கணக்கிலிருந்து மாற்றுதல்.

5.12 கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கில் (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கில் (PFCPR') பற்று வைத்ததன் மூலம் பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், வேறொரு நபரின் (அதாவது கொள்வனவாளரின்) வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கிலிருந்து

வெளிநாடுகளில் அனுமதி பெற்ற முதலீடுகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை அதே கணக்கினூடாக வாடிக்கையாளருக்கு மாற்றுதல்.

5.13 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வதியும் புலம்பெயர்ந்தவராக இருப்பின் அல்லது இலங்கையிலிருந்து வெளியேறும் குடியகல்பவராக (ஆரம்பத்தில் அல்லது பின்னர்) இருப்பின், தகைமை பெற்ற புலம்பெயர் கொடுப்பனவு மற்றும் இலங்கையில் நடமாடும் வருமானம் என்பவற்றை ‘‘மூலதன பரிவர்த்தனை ரூபாய் கணக்கிற்கு’’ (CTRA) அல்லது குடியகல்பவர்களின் பணம் அனுப்பும் வருமான கணக்கு (ERIA) கணக்கு உரிமையாளருக்கு இருப்பின், அதற்கு மாற்றுதல்.

5.14 கணக்கு உரிமையாளர் இலங்கையில் அல்லது அதற்கு வெளியில் வதியும் வெளிநாட்டவராக இருப்பின், 2021 மார்ச் 18ஆம் திகதியிட்ட மூலதன பரிவர்த்தனை ரூபாய்க் கணக்கு (CTRA) சம்பந்தமாக 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க அறிவுறுத்தல் தொடரின் 5(c) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அனுமதி பெற்ற பற்று வைத்தலுக்காகப் பணத்தை மாற்றுதல்.

5.15 கணக்கு உரிமையாளர் வெளிநாட்டவராக அல்லது இரட்டைக் குடியுரிமை பெற்றவராக இலங்கையில் தொழிலொன்றில் ஈடுபட்டுள்ளபோது, வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகளிலிருந்து (BFCA), வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்குகளிலிருந்து, தொழில் தருநரின் இலங்கை ரூபாய் கணக்குகளிலிருந்து பணத்தை மாற்றுதல் அல்லது ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் அல்லது சம்பளம், தொழில் மற்றும் ஓய்வுகால நன்மைகள் என்பவை சம்பந்தமாக தொழில் ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்தவொரு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது அத்தகைய ஊழியர் ஒருவருக்குச் செலுத்தப்படவிருக்கும் ஏதேனும் கொடுப்பனவு.

5.16 மரணமடைந்த நபர் ஒருவரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (PFCPR) மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல். மேற் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி பந்தியில் 3.5இன் கீழ் தகைமையைப் பூர்த்தி செய்துள்ளபடி, கணக்கு உரிமையாளர் அத்தகைய மரணமடைந்த நபரின் சொத்தின் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக அல்லது நிருவாகியாக அல்லது மரணசாதனகாரராக இருப்பார்.

5.17 தற்பொழுது இருக்கின்ற ஒரு கணக்கில், கணக்கு உரிமையாளர் பயன் பெறுநராக பெயர் குறித்து நியமிக்கப்பட்டு இலங்கையில் வதிபவராக இருக்கும்போது மரணமடைந்த நபரின் சொத்துக்கள் சம்பந்தமான நிருவாகியின் / நிறைவேற்றுநரின்Æ அல்லது கம்பனியொன்றின் பெறுநரின் / ஒழிக்குநரின் உள்வரும் முதலீட்டு கணக்கொன்றிலிருந்து (IIA) மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

5.18 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வெளிநாட்டு தொழில் தருநருக்கு சேவை வழங்குவதில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பிரசையாக இருந்தால், வெளிநாட்டு தொழில் தருநருடன் சம்பளம் மற்றும் Æஉழைப்பை கணக்கு உரிமையாளருக்கு வழங்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனியின் வியாபார, வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (BFCA) மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

5.19 கணக்கு உரிமையாளர் உள்நாட்டு கப்பல்Æவிமான கம்பனிக்குச் சொந்தமான கப்பல் ஒன்றில் / விமானம் ஒன்றில் வெளிநாட்டில் சேவையாற்றுகின்ற இலங்கை பிரசையாக இருப்பின், பணியாட் தொகுதி சம்பளம் / ஊதியம் என்பவற்றுடன் ஏனைய சம்பந்தப்பட்ட தொழில் மற்றும் ஓய்வூதிய பயன்கள் சம்பந்தமாக, வியாபார, வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (BFCA) அல்லது அத்தகைய உள்நாட்டு கப்பல்Æவிமான கம்பனியின் (அதாவது தொழில் தருநர்) வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கிலிருந்து பணத்தை மாற்றுதல்.

5.20 விசேட வைப்புகள் கணக்கிற்கு (SDAS) ஏற்புடையதான வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் (FEA) கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பவற்றிற்கு அமைவாக, கணக்கு உரிமையாளரால் திறக்கப்பட்டு பேணப்படுகின்ற விசேட வைப்புகள் கணக்கிற்கு (SDAS) உரிய வட்டி உட்பட முதிர்வடையும் போது கிடைக்கின்ற வருமானம்.

5.21 கணக்கில் உள்ள பணத்தின் மீது வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டிக் கொண்ட வட்டி.

5.22 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கொழும்புத் துறைமுக நகர அதிகாரசபைப் பிரதேசத்திற்குள் மற்றும் அப்பிரதேசதிலிருந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி பெற்றுள்ள அதிகாரம் பெற்ற தனிநபரின் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து கணக்கு உரிமையாளர் பெற்றுக்கொள்கின்ற வெளிநாட்டுச் செலாவணி/உழைப்பு/கொடுப்பனவுகள்.

## 6. அனுமதி பெற்ற பற்று

6.1 கணக்கு உரிமையாளரின் மற்றும் / அல்லது இலங்கையில் வதிகின்ற நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் நடப்புப் பரிவத்தனை சம்பந்தமாக இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு வெளிச் செல்லும் பண அனுப்பல்.

6.2 இலங்கையில் வதிகின்ற நபராக கணக்கு உரிமையாளரின் மூலதனப் பரிவர்த்தனை சம்பந்தமாக இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்பட்ட வெளிச் செல்லும் பண அனுப்பல்.

6.3 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வதிகின்றவராக இருக்கும்போது எந்தவொரு நடவடிக்கைக்காகவும் இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்பட்ட வெளிச் செல்லும் பண அனுப்பல்.

6.4 இலங்கையில் இலங்கை ரூபாவில் பணம் வழங்குதல்.

6.5 அதே கணக்கு உரிமையாளரின் மற்றும்Æஅல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய (PFCPR) கணக்கிற்கு பணத்தை மாற்றுதல்.

6.6 வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு (BFCA) அல்லது அந்தக் கணக்கு உரிமையாளரின் வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கிற்கு பணத்தை மாற்றல்.

6.7 நடைமுறைப் பரிவர்த்தனைக்கு உரியதாக, இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர் ஒருவரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய (PFCPR) கணக்கிற்கு அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கிற்கு பணத்தை மாற்றுதல்.

6.8 கணக்கு உரிமையாளர் எவராக இருந்தாலும், இரு தரப்பினரும் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர்களாக இருக்கின்றபோது, இலங்கையில் முதலீடு அல்லது சொத்துக்களைக் கையகப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தைத் தவிர்த்து, ஏனைய (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய (PFCPR) கணக்கிற்கு அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கிற்கு பணத்தை மாற்றுதல்.

6.9 கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கில் (PFCA) / எதெர இசுர பிரிமியர் தனிநபர் வெளிநாட்டு நாணய (PFCPR) கணக்கில் உள்ள பணத்தைப் பயன்படுத்தி இலங்கை அபிவிருத்தி முறிகளில் (SLDBS) வெளிநாட்டு நாணயத்தில் முதலீடு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள்.

6.10 அனுமதிக்கப்பட்ட பெற்ற முதலீடுகளை வெளிநாடுகளில் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளை விற்பனையாளரால் செலுத்தீடுகள் மேற்கொள்ளப்பட்ட அதே OIA ஊடாகப் பணத்தை வேறொரு நபரின் (அதாவது விற்பனையாளரின்) வெளிச் செல்லும் (OIA) முதலீட்டுக் கணக்கிற்கு மாற்றுதல்.

6.11 நடப்புப் பரிவர்த்தனை சம்பந்தமாக வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் (FEA) கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கணக்கு உரிமையாளரின் மற்றும் /அல்லது அவரது நெருங்கிய குடும்ப அங்கத்தினர்களின் (ஒரு நபருக்கு) பயண நடவடிக்கைகளுக்காக (FTC) பதிவேற்றுவதற்காக பணத்தை

மாற்றுவதற்கு அல்லது வெளிநாட்டு நாணய தாள்களில் அமெரிக்க டொலர் 5000 அல்லது அதற்குரிய விகிதாசாரத்தில் ஏனைய எந்தவொரு பண வகையில் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளுதல்.

6.12 2021 மார்ச் 18ஆம் திகதியிட்ட இலங்கை மத்திய வங்கியின் 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, வெளிநாடுகளில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு (குடியகன்றவர்களைத் தவிர்த்து) கடன் மற்றும் முற்பணம் வழங்குவது சம்பந்தமாக கணக்கு உரிமையாளரால் பெறப்பட்ட கடனை மீளச் செலுத்துதல் / கடன் சேவைக்காக பணத்தை மாற்றுதல்.

6.13 இரட்டை பிரசாவுரிமை மீது மற்றும் வேறொரு நாட்டில் நிரந்தரமாக வதிவதற்காக விசா மீது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையர்கள் 2021 மார்ச் 18ஆம் திகதியிட்ட 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க அறிவுறுத்தல்களுக்கு அமைவாகப் பெற்றுக் கொண்ட இலங்கை ரூபாய் கடனை (LLA) அல்லது வெளிநாட்டு நாணய கடனை (FCLC) மீளச் செலுத்துவதற்காகÆகடன் சேவைக்காக மேற்கொள்ளப்படும் பண மாற்றல்.

6.14 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற, இலங்கையில் தற்காலிகமாக சுற்றுலா மேற்கொள்ளுகின்ற வெளிநாட்டவராக இருக்கும்போது, வெளிநாட்டு நாணயத்தில் பணம் மீளப் பெற்றுக்கொள்ளுதல்.

6.15 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வதிகின்றவராக அல்லது இலங்கையில் வதியும் வெளிநாட்டவராக இருக்கும்போது, அதே கணக்கு உரிமையாளரின் உள்வரும் முதலீட்டு கணக்கிற்கு (IIA) பணத்தை மாற்றுதல்.

6.16 கணக்கு உரிமையாளர் வெளிநாட்டவராக அல்லது இலங்கையில் தொழிலில் ஈடுபட்டுள்ள இரட்டை பிரசாவுரிமை பெற்றுள்ளவராக இருக்கும்போது, வியாபார வெளிநாட்டு நாணய கணக்கு (BFCA) அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கு அல்லது தொழில் தருநரின் இலங்கை ரூபாய் கணக்குகளுக்கு சம்பளம் அதிகமாக செலுத்துதல், தொழில் மற்றும் ஓய்வூதிய பயன்கள் அல்லது அத்தகைய எந்தவொரு தொழில் தருநருக்குச் செலுத்த வேண்டிய வேறு ஏதேனும் கொடுப்பனவு.

6.17 கணக்கு உரிமையாளர் உள்நாட்டு கப்பல் /விமான கம்பனிக்குச் சொந்தமான கப்பலில் /விமானத்தில் வெளிநாட்டில் சேவையாற்றுகின்ற இலங்கைப் பிரசையாக இருக்கும்போது வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு (BFCA) பணத்தை மாற்றுதல் அல்லது அத்தகைய உள்நாட்டு கப்பல் /விமான கம்பனியின் (அதாவது தொழில் தருநர்), வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கிற்கு பணியாட் தொகுதியினரின் சம்பளம் /ஊதியம் தொடர்பில் கூடுதலாகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவு மற்றும் தொழில்தருநருக்குச் செலுத்த வேண்டிய வேறு கொடுப்பனவு.

6.18 கணக்கு உரிமையாளர் வெளிநாட்டில் தொழில் புரிகின்ற இலங்கைப் பிரசையாக இருக்கும் போது, கணக்கு உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயம் பெயர் குறிக்கப்பட்ட வீடமைப்பு கடனைப் பாதுகாப்பதற்காக வழங்கப்படுகின்ற காப்புறுதிப் பத்திரம் சம்பந்தமான காப்புறுதிக் கொடுப்பனவுகளை இலங்கைக் காப்புறுதி ஒழுங்குறுத்தும் ஆணைக்குழுவினால் ஒழுங்குமுறைப்படுத்தும் காப்புறுதிக் கம்பனிகளின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு (BFCA) மாற்றுதல்.

6.19 வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (FEA) 8(3)வது பிரிவின் பிரகாரம், உரிமையாளரின் ஏதுமொரு நோக்கத்திற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள பணத்தினை கணக்குரிமையாளரின் ஏதேனும் நோக்கத்திற்காக வெளிநோக்கி அனுப்புதல்.

6.20 கணக்கு உரிமையாளர் வெளிநாட்டில் தொழில் புரிகின்ற இலங்கையர் எனில் (புலம் பெயர்ந்தவரைத் தவிர்த்து) உள்நாட்டுக் கல்வி நிறுவனங்களில் மாணவர்களாக அனுமதிக்கப்பட்டிருக்கின்ற நெருங்கிய குடும்ப உறுப்பினர் சம்பந்தமாக பாடநெறிக் கட்டணம் அல்லது மேலதிக வகுப்பு கட்டணம் என்ற வகையில் அத்தகைய உள்நாட்டு கல்வி நிறுவனங்களின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு (BFCA) மாற்றுதல்.

## 7. கட்டணம் மற்றும் அறவீடு

விகிதாசார மற்றும் வரி அறவிடலுக்காக கீழுள்ள இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.
https://www.peoples.lk/interest-rates/